முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் II பரீட்சை – 2022 சனவரி**

# (203) வணிகச் சட்டம்

(Business Law)

2022-03-19
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.6** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருக்கும் தமிழ் குடிமக்களுக்கு மாத்திரம் ஏற்புடைய சட்டம் எது?

(1) உரோமன் - டச்சுச் சட்டம்
(2) ஆங்கிலச் சட்டம்
(3) தேசவழமைச் சட்டம்
(4) முஸ்லிம் சட்டம்

**1.2** பின்வருவனவற்றுள் பொருள்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் விற்பனையாளருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரமாக (remedy) **அமையாதது** எது?

(1) மீள்விற்பனை உரிமை
(2) பற்றுரிமை (தடுத்து வைப்பதற்கான உரிமை)
(3) இடைவழியில் நிறுத்துவதற்கான உரிமை
(4) குறிப்பான செயற்பாட்டைப் பெறுதல்

**1.3** கீழ்வரும் கூற்றுகளைக் கவனத்தில் கொள்க :

**(a)** பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறப்படுவது குறித்த நியாயாதிக்கத்தை உயர் நீதிமன்றம் (Supreme Court) கொண்டிருக்கிறது.

**(b)** மாவட்ட நீதிமன்றம் முதனிலை நீதிமன்றமொன்றாகக் கருதப்படுகிறது.

**(c)** விவாகரத்து மற்றும் பிள்ளைகளை பொறுப்பில் வைத்திருத்தல் போன்றவை தொடர்பான வழக்குகள் நீதிவான் நீதிமன்றங்களால் விசாரிக்கப்படுகின்றன.

மேலுள்ளவற்றுள் இலங்கையிலுள்ள தற்போதைய நியாயாதிக்க முறைமை (judicial system) தொடர்பில் சரியான கூற்றுகள் :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்
(2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்
(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்
(4) மேற்கூறிய யாவும்.

**1.4** 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் ஊழியர்கள் வகை :

(1) தேசிய பயிலுநர் சபையின் கீழான பயிலுநர்கள்
(2) கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள்
(3) ஓய்வுபெற்ற அரச சேவையாளர்கள்
(4) உள்நாட்டுச் சேவையாளர்கள்.

**1.5** எடுத்துச் செல்லப்படுகின்ற பொருள்களின் வகை, அளவு மற்றும் சேரும் இடம் ஆகியவற்றை விவரிக்கும் வகையில் ஒரு கப்பலேற்றுநருக்கு எடுத்துச் செல்பவரால் விநியோகிக்கப்படுகின்ற ஒரு சட்ட ஆவணம் :

(1) நாணயக் கடிதம்
(2) வார்நாமம்
(3) விலைப்பட்டியல்
(4) பரிமாற்று உண்டியல்

**1.6** கீழ்வரும் ஊழியர் வகைகளைக் கவனத்திற் கொள்க :

**(a)** கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள்

**(b)** வீட்டுப் பணிப்பெண்கள், தனிப்பட்ட சாரதிகள் போன்ற வீட்டுப் பணியாளர்கள்

**(c)** தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்கள்

**(d)** அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பணியாற்றும் ஊழியர்கள்

மேலுள்ளவற்றுள், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட ஊழியர்கள் :

(1) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்
(2) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்
(3) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்
(4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டமானது கடை அல்லது அலுவலகமொன்றில் 18 வயதிற்கும் குறைந்த எந்தவொரு நபரையும் தொழிலுக்கமர்த்துவதைத் தடை செய்கிறது.

**1.8** பொருள்கள் விற்பனை ஒப்பந்தமொன்றின் ஒரு கூறு (element) இடம் (location) ஆகும்.

**1.9** CIF உடன்படிக்கையின் கீழ், கொள்வனவாளருக்கு நன்மையளிக்கின்ற காப்புறுதி ஒப்பந்த மொன்றைச் செய்துகொள்வது விற்பனையாளரின் பொறுப்பாகும்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** பணியிடத்தில் ஊழியர்களுக்கு உரித்தான இரண்டு (02) மனித உரிமைகளைக் குறிப்பிடுக.

**1.11** சர்வதேச வர்த்தகப் பிணக்கொன்றைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) நீதித்துறை சாராத பிணக்குத் தீர்த்தல் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

**1.12** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு (02) உட்கிடை நிபந்தனைகளைக் (implied conditions) குறிப்பிடுக.

**1.13** இலங்கை கம்பனிகள் பதிவாளரின் இரண்டு (02) பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

**1.14** ஊழியர் ஒருவருக்கும் சுயாதீன ஒப்பந்தகாரர் ஒருவருக்குமிடையிலான வேறுபாட்டை இனங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) சோதனைகளைக் (tests) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(புள்ளிகள் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**டொம்** மற்றும் **ஜெரி** ஆகியோர் சிறுவர்களுக்கான கார்டூன் திரைப்படங்களைத் தயாரிக்கும் பங்குடமை வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்கள் கணினி மென்பொருளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் அசைவூட்டங்களின் (அனிமேஷன்) அடிப்படையில் தமது வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுகின்றனர். எவ்வாறாயினும் **ஜெரி, வரையறுக்கப்பட்ட ABC கம்பியூட்டர்ஸ் கம்பனியிடமிருந்து** கழிவு விலையில் கணினி மென்பொருளை கொள்வனவு செய்திருந்த போதிலும், அவர் வாங்கிய விலையின் இருமடங்கு விலையான தற்போதைய சந்தை விலையில் அதனை அவர் பங்குடமை வியாபாரத்திற்கு விற்பனை செய்திருந்ததை **டொம்** கண்டறிந்துள்ளார். இந்தக் கொடுக்கல் வாங்கல் மூலம் **ஜெரி** இரகசிய இலாபமொன்றை ஈட்டியுள்ளதுடன் அவர் அதனை **டொம்** உடன் பகிர்ந்து கொள்ளவில்லை.

மேலும், **ஜெரி** இதேபோன்றதொரு வியாபாரத்தை ஆரம்பித்துள்ளதையும் அவரது வியாபாரத்திற்காக, பங்குடமையில் பயன்படுத்தப்படுகின்ற கணினி மென்பொருளைப் பயன்படுத்தியிருப்பதையும் **டொம்** கண்டறிந்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **ஜெரி** ஒரு பங்காளர் என்ற வகையில் அவரது கடமைகளை மீறியுள்ளாரா என்பதை **விபரிக்குக.**

(07 புள்ளிகள்)

(b) இந்த விடயம் தொடர்பில் **டொம்**மின் சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

மாறிக்கொண்டிருக்கும் வணிகச் சூழலில், வணிகம் மற்றும் நாட்டதாரர்களில் செல்வாக்குச் (influence) செலுத்துகின்ற புதிய போக்குகள் நாளுக்கு நாள் வெளிப்படுகின்றன. எனவே, இத்தகைய புதிய போக்குகள் மற்றும் அவற்றுக்குத் துணைபுரியும் கூறுகளை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டரீதியான வேலைச்சட்டகத்தை விருத்தி செய்வது இன்றியமையாததாகும். நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மக்களைப் பாதுகாப்பதற்கும் என பல புதிய சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) ***குறிப்பிடுக.*** (04 புள்ளிகள்)

(b) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துகள் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற மூன்று (03) வகையான புலமைச் சொத்துகளை (intellectual property) ***விபரிக்குக.*** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

பல்தேசியக் கம்பனியொன்றில் பணியாற்றுகின்ற ***சரத்*** மற்றும் ***மாலன்*** ஆகியோர் நல்ல நண்பர்களாவர். அவர்கள் இருவரும் தமது குடும்ப அங்கத்தவர்களுக்காக காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர். ***சரத்*** தனக்கும் தனது மனைவியான ***ரோஸி***க்குமான ஆயுள் காப்புறுதிக்கு விண்ணப்பித் துள்ளார். ***மாலன்*** திருமணமாகாதவர். எனவே அவர் தனது காருக்கான பொதுக் காப்புறுதி ஒன்றிற்கும் அவரது மூத்த சகோதரியான ***பிரியா***வுக்கான ஆயுள் காப்புறுதியொன்றிற்கும் விண்ணப்பித்துள்ளார். காப்புறுதிக் கம்பனியானது ***மாலனால்*** தனது சகோதரியின் பொருட்டு அனுப்பப்பட்ட காப்புறுதி விண்ணப்பத்தை நிராகரித்திருந்த அதேவேளை ***சரத்தினால் ரோஸி*** தொடர்பில் அனுப்பப்பட்ட காப்புறுதி விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டிருந்தது.

3 மாதங்களின் பின்னர், ***மாலனுடைய*** கார் மரம் ஒன்றின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது அந்த மரம் வேரோடு சாய்ந்ததால் சேதமடைந்தது. அவர் சேதத்திற்கான உரிமைக்கோரிக்கை (claim) ஒன்றை முன்வைத்தபோது, காப்புறுதிக் கம்பனி அந்த உரிமைக்கோரிக்கையை நிராகரித்திருந்தது. ***மாலன்*** தனது விண்ணப்பப்படிவத்தில் சில உண்மைகளை மறைத்துள்ளார். அதில் அவர் தனது காரினை வாகனகூடம் (கராஜ்) ஒன்றில் நிறுத்தி வைப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் தனது காரை பொதுவாக நெல் வயலுக்கு அருகிலுள்ள மரத்தடியில் நிறுத்துவதை காப்புறுதிக் கம்பனி கண்டறிந்தது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) தனது மனைவியின் ஆயுள் காப்புறுதிக்காக ***சரத்தினால்*** அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த அதே வேளை தனது சகோதரியின் ஆயுள் காப்புறுதிக்காக ***மாலன்*** அனுப்பிய விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(b) சேதமடைந்த கார் தொடர்பில் காப்புறுதிக் கம்பனியால் ***மாலனின்*** உரிமைக்கோரிக்கை நிராகரிக்கப் பட்டமைக்கான அடிப்படையை (basis) ***விபரிக்குக.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

கைமாற்றத்தகு சாதனம் என்பது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது கேள்வியின் மீது நிலையான பணத் தொகை ஒன்றைச் செலுத்துவதற்கான எழுத்திலான ஒரு கட்டளை அல்லது நிபந்தனையற்ற உறுதிமொழி ஆகும். இதனை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்ற முடியும் என்பதுடன் அவ்வாறு மாற்றப்பட்டதும் அதனை வைத்திருப்பவர் சாதனத்திற்கான முழுமையான சட்ட உரித்தையும் பெற்றுக்கொள்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) காசோலையொன்றிற்கும் மாற்றுண்டியலொன்றிற்கும் இடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) காலக்கிரமத்தில் மாற்றுண்டியலொன்றை வைத்திருப்பவராகக் கருதப்படுவதற்கு காணப்பட வேண்டிய நான்கு (04) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) மாற்றுண்டியலொன்றை வரைபவரின் (drawer) மூன்று (03) பொறுப்புகளை (liabilities) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

***சஜீகா*** என்பவர் இலங்கைக்கு இரசாயன உரங்களை இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் சீனாவிடமிருந்து ரூபா 100 மில்லியன் பெறுமதியான இரசாயன உரங்களை இறக்குமதி செய்ததுடன் அவை **மேர்மைட்** என்னும் பெருடைய கப்பல் ஒன்றில் இலங்கைக்கு அனுப்பப்பட்டன. இலங்கையில் இரசாயன உரங்களைத் தடை செய்கின்ற தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக கப்பலானது கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக இந்தியாவுக்கு அண்மையிலான ஆழ்கடலில் சிக்கிக்கொண்டது. ஆழ்கடலில் நீண்ட நாட்கள் தரித்திருப்பதால் உரத்தைக் கொண்டுள்ள கொள்கலன்களில் இரசாயன மாற்றங்கள் நிகழ்வதை கப்பல் மாலுமியான (தலைவன்) **திரு. கூல்** என்பவர் கண்ணுற்றார். இதனால் அவர் தனது சொந்தச் செலவில் இந்தியாவிலுள்ள சென்னை துறைமுகத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அவர் நடந்ததைத் தெரிவிக்க **சஜீகா**வைத் தொடர்புகொள்ள முயற்சித்திருந்தார், ஆனால் எவ்வித பதிலும் அவருக்குக் கிடைக்கவில்லை. 2 வாரங்களின் பின்னர், உரக் கொள்கலன்களை தொடர்ந்தும் களஞ்சியப்படுத்துவதற்கு அவரிடம் போதிய பணம் இல்லாததால் உரத்தினை விற்பனை செய்வதற்கு **திரு. கூல்** தீர்மானித்தார். அவர் உரத்தினை ரூபா 75 மில்லியனுக்கு விற்பனை செய்ததுடன், பணத்தினை **சஜீகா**வுக்கு அனுப்புவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) உர விற்பனை தொடர்பில் **திரு. கூல்** மற்றும் **சஜீகா** ஆகியோருக்கிடையில் முகவராண்மை உறவொன்று (agency relationship) காணப்படுகிறதா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) **திரு. கூல்** உரத்தினைக் களஞ்சியப்படுத்துவதற்காகச் செலவுசெய்த பணத்தை **சஜீகா**விடமிருந்து வசூலிக்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

(A) **சமன்** மற்றும் அவரது மனைவியான **பியூமி** ஆகியோர் நுவரெலியாவிலுள்ள "**ஹோட்டல் விக்டோரியா"** இல் சொகுசு அறை ஒன்றை முன்பதிவு செய்துள்ளனர். ஹோட்டல் வளாகத்திற்கு வந்த பின்னர், அவர்கள் தமது காரை நிறுத்துவதற்கான இடத்தைத் தேடினர். ஹோட்டல் பாதுகாவலர்களில் ஒருவர் கார் நிறுத்துவதற்கான இடத்தைக் காட்டி, *"ஐயா, நாங்கள் கார் நிறுத்துவதற்கான இடத்தை வழங்குகின்றோம், ஆனால் கோவிட் 19 சுகாதார வழிகாட்டல்கள் காரணமாக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களுடனேயே நாங்கள் இயங்குவதால் வாகனத்திற்கான பாதுகாப்பை வழங்க முடியாதுள்ளது"* எனக் கூறினார்.

3 நாள்களுக்கான அறைக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், அவர்கள் அறையினுள் பிரவேசித்தனர். அறைக் கதவில் *"தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட பொருள்களுக்கு ஹோட்டல் முகாமை எந்தச் சூழ்நிலையிலும் பொறுப்பேற்காது"* என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதை **சமன்** அவதானித்தார்.

ஹோட்டலின் முகப்புப் பகுதியில், **மெனிக்கா** என்பவரால் நடத்தப்படுகின்ற ஆபரணக் கடையொன்று காணப்படுகிறது. அவர் கடையிலுள்ள கண்ணாடி யன்னலின் உட்புறமாக 4,000 அமெரிக்க டொலர் என விலை குறிக்கப்பட்ட விலையுயர்ந்த இரத்தினக்கல் மாலையை காட்சிப்படுத்தியிருந்தார். மேலும் அதில், இந்த மாலை ஆரம்பத்தில் இராணி விக்டோரியாவுக்குச் சொந்தமாகவிருந்த ஒரு பண்டைய பொருள் என விபரிக்கப்பட்டிருந்தது. பண்டைய பொருள்களை விரும்புபவரும் ஆபரணச் சேகரிப்பாளராகவும் உள்ள **பியூமி** இந்த மாலையை வாங்குவதற்கு விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் அது காட்சிப்படுத்தலுக்காக மாத்திரமே வைக்கப்பட்டுள்ளதாகவும், விற்பனைக்காக அல்ல எனக் கூறி, **மெனிக்கா** அதனை விற்பனை செய்ய மறுத்திருந்தார்.

ஹோட்டலிலிருந்து வெளியேறும் தறுவாயில், தமது அறையினுள் இருந்த அவரது அட்டிகை (பதக்க மாலை) காணாமற் போயிருந்ததை **பியூமி** அவதானித்தார். பின்னர், அவர்களுடைய காரின் உதிரிச் சக்கரமும்கூட (spare wheel) காணாமற் போயிருந்ததையும் அவர்கள் கண்ணுற்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **பியூமி** மற்றும் **மெனிக்கா** ஆகியோரிடையே வலிதான (செல்லுபடியான) ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) தொலைந்த பொருள்கள் தொடர்பில் "**ஹோட்டல் விக்டோரியா"**வுக்கு எதிராக **சமன்** மற்றும் **பியூமிக்கு** உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(c) தனது வாடிக்கையாளரின் தொலைந்த பொருள்கள் தொடர்பில் **"ஹோட்டல் விக்டோரியா"**வுக்கு உள்ள சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) **அமல்** என்பவர் மொணராகலையில் உள்ள ஒரு வணிகர் ஆவார். அவர் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு சேதன உரத்தை விற்பனை செய்கிறார். **அமல்** கொழும்பிலுள்ள **ராஜ்** என்பவரின் களஞ்சியத்திலிருந்து 10,000 கிலோகிராம் சேதன உரத்தை வாங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார். **ராஜ்** இலங்கைக்கு சேதன உரத்தை இறக்குமதி செய்யும் ஓர் இறக்குமதியாளர் ஆவார். ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு முன்னர், **ராஜ்** இனால் காண்பிக்கப்பட்ட சேதன உர மாதிரியின் தரத்தை **அமல்** பரீட்சித்திருந்தார். **அமல்** ஒவ்வொன்றும் 50 கிலோகிராம் கொண்ட மூடைகளில் 10,000 கிலோகிராம் சேதன உரத்தையும் பெற்றுக்கொண்டதுடன் அவற்றை உள்ளூர் விவசாயிகளுக்கும் விற்பனை செய்திருந்தார். இரண்டு நாட்களின் பின்னர், உரத்தின் மோசமான தரம் பற்றி விவசாயிகள் முறைப்பாடு செய்ததுடன், அவர்கள் **அமலிடம்** கொள்வனவு செய்த உர மூடைகளையும் திருப்பி அனுப்பியிருந்தனர். பின்னர், தான் ஒப்பந்தம் செய்துகொள்ள முன்னர் தனிப்பட்ட ரீதியில் பரீட்சித்த உர மாதிரியின் தரத்துடன், தனக்குக் கிடைக்கப்பெற்றிருந்த சேதன உரத்தின் தரம் பொருந்தவில்லை என்பதை **அமல்** கண்டறிந்தார். மேலும், இந்த உரம் மொத்தமும் அதன் மோசமான தரம் மற்றும் இரசாயன உள்ளடக்கம் காரணமாக சேதன மரக்கறிச் செய்கைக்கு உகந்ததல்ல என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

பொருள்கள் விற்பனை கட்டளைச்சட்டத்தின் கீழ், **ராஜ்** இற்கு எதிராக **அமலுக்கு** உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |